மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஊ) தமிழ்நாடு கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு (பன்முகச் சேவை ஒளியிழைச் செய்திப் பரிமாற்றம் உள்ளடங்கலான) மேலாண்மையைக் கையகப்படுத்துதல், சொத்து உரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு (பன்முகச் சேவை ஒளியிழைச் செய்திப் பரிமாற்றம் உள்ளடங்கலான) மேலாண்மையைக் கையகப்படுத்துதல், சொத்து உரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு (பன்முகச் சேவை ஒளியிழைச் செய்திப் பரிமாற்றம் உள்ளடங்கலான) மேலாண்மையைக் கையகப்படுத்துதல், சொத்து உரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2006 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கையில் உரையாற்றுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோலவே இந்தப் பேரவையிலே கடந்த 5 ஆண்டு காலமாக நான் பணியாற்றுவதற்கு நல்ல வாய்ப்பினைத் தந்த, என்னுடைய நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்ற என்னுடைய அறந்தாங்கி தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல என்னை வேட்பாளராகத் தேர்ந்தெடுத்து எனக்கு வெற்றி தேடித் தந்த என்னுடைய பாசத்திற்கும், அன்பிற்கும் உரிய சகோதரர் மாண்புமிகு திருநாவுக்கரசர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த 5 ஆண்டுக் காலத்தில் இந்த அவையிலே நான் பணியாற்றுவதற்கு வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மரியாதைக்கும், அன்பிற்கும், பாசத்திற்கும் உரிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற